1986 ஏப்ரல் 26]

திருவாளர்கள் எ.எஸ்.ஏ. ஆறுமுகம், எஸ். என். இராமசாமி பொ. உத்திராபதி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; பேரவை முன்னுள்ள கேள்வி :

'' மானியக் கோரிக்கை எண். 30-சமூகநலன் என்ற தலைப் பின்கீழ் ரூ. 76,04,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும் ''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

6. அறிவிப்பு.

ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு 1986 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1986) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. அரசினர் சட்ட முன்வடிவு.

ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 27/1986)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்'' .

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

'' 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 27/1986) மக்கள் கருத்தைத் தெரிந்து கொள்வதற்காக சுற்றுக்கு அனுப்பப் பெறவேண்டும் ''.

---

* 1986 மார்ச் 26 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.